

மிக்ஜாம் புயல் அதிதீவிர கனமழையால் பாதிப்பை எதிர்கொண்ட, 100 திருநங்கைகள் திருநம்பியர்களுக்கு சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், அரிசி பால் மளிகைப்பொருட்கள் போர்வைகள் அடங்கிய தொகுப்பை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நிவாரணமாக வழங்கினார். இதில் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–க்கு உட்பட்ட குரோம்பேட்டை பகுதியில் மிக்ஜாம் புயல் கன மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாட்டில் அரிசி மளிகை சாமான்கள் போர்வை பாய் போன்ற நிவாரண நல திட்ட உதவிகளை கழக நாடாளுமன்ற குழு தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள் வழங்கினார். அப்பொழுது தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி கார்த்திகேயன், வட்டக் கழக செயலாளர் டீ.கன்னியப்பன், காமேஷ் ரங்கநாதன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### புயலை விட அதி வேகமாகச் செயல்பட்டு

# பேரிடரிலிருந்து மக்களை மீட்டிருக்கிறார் முதல்வர்!

## தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. துறை மாநிலத் தலைவர் எம்.பி. ரஞ்சன்குமார் அறிக்கை!

சென்னை, டிச. 11

“புயலை விட அதி வேகமாகச் செயல்பட்டு பேரிடரிலிருந்து மக்களை மீட்டிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்று தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. துறை மாநில தலைவர் எம்.பி. ரஞ்சன்குமார் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய ”மிக்ஜாம்” புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு, கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

20 அமைச்சர்களையும் 50க்கும் மேற்பட்ட ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் அதிகாரிகளை நியமித்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முடுக்கிவிட்டார். 70 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவுக்குப் பெய்த அதி கனமழையை தமிழ்நாடு அரசு சிறப்பாக எதிர்கொண்டதாக தி இந்து, டைம்ஸ் ஆப் இந்தியா, டெக்கான் கிரானிக்கல் போன்ற ஆங்கில நாளேடுகள் ஆதாரத்துடன் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்திலிருந்து திட்டமிட்டு தண்ணீரைத் திறந்துவிட்டதால், பெரு வெள்ளம் தவிர்க்கப்பட்டதாக தி இந்து ஆங்கில நாளிதழ் முதலமைச்சரைப் பாராட்டியிருக்கிறது. மீட்புப் பணிகளை விரைந்து செயல்படுத்தியதாக டைம்ஸ் ஆப் இந்தியா பாராட்டியிருக்கிறது. மக்களை பேரழிவிலிருந்து தமிழ்நாடு அரசு மீட்டுள்ளதாக அனைத்து ஊடகங்களும் பாராட்டிக் கொண்டிருக்கின்றன.

வடிகால் பணி மேற்கொள்ளப்பட்டதால் தான் சென்னை மாநகரம் விரைந்து மீண்டிருக்கிறது. இல்லையென்றால், இத்தகைய அதி கன மழைக்கு சென்னை மாநகரம் மீள்வதற்கு ஒரு மாதம்கூட ஆகியிருக்கலாம் என்று நீர்வள வல்லுநர்கள் கூறுகிறார்கள். இரு வடிகாலுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்தியதால் தான் சென்னை விரைவில் மீண்டதாக நீர் மேலாண்மை வல்லுநர் பேராசிரியர் ஜனகராஜன் பாராட்டியிருக்கிறார்.

புயலைவிட அதிகவேகமாக செயல்பட்டு பேரிடரிலிருந்து மக்களை மீட்டிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இந்த சூழலில் மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 6 ஆயிரம் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த நிவாரணத் தொகையை பாதிக்கப்பட்டவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இதுவரை வழங்கப்பட்ட நிவாரண உதவித் தொகையிலேயே இது தான் அதிகத் தொகையாகும். அதேபோல், பயிர், மரங்கள், கால்நடை, வீடு இழப்பு, உயிரிழப்பு போன்றவற்றுக்கும் நிவாரண உதவித்தொகையை உயர்த்தி பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டுவிடுவோம் என்ற நம்பிக்கையை முதலமைச்சர் ஏற்படுத்தியிருக்கிறார். தமிழ்நாட்டு வரலாற்றில் களத்தில் நின்று முதலமைச்சரும் அமைச்சர்களும், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் மீட்புப் பணிகளை நிறைவேற்றிய வரலாறு கிடையாது. அத்தகைய வரலாற்றைப் படைத்து, இது தான் சமூக நீதியைப் போன்றும் திராவிட மாடல் அரசு என்று மீண்டும் நிரூபித்திருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பில் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. தலைமை! தா.இளைய அருணா – எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலை!

# ஆர்.கே.நகர் மேற்கில் 10 ஆயிரம் பேருக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் மற்றும் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. வழங்கினர்!

சென்னை, டிச.11-

புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆர்.கே.நகர் மேற்கில் 10,000 பேருக்கு ஜே.ஜே.எபினேசர் தலைமையில் நிவாரண உதவிகளை அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் மற்றும் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வழங்கினர்.

மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி ஆர்.கே.நகர் மேற்குப் பகுதியில் 10,000 பேர்களுக்கு நிவாரண உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர் தலைமையில் மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மீன் வளத்துறை அமைச்சர்அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வழங்கினர்.

இதில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், மால் டி.வெங்கடேசன், எம்.லோகநாதன், எம்.கோவிந்தராஜ், திராவிட செல்வி, பி.சீனிவாசன், ஏ.டி.மணி, டாக்டர் கலைவாணன், விமலா, எஸ்.எம்.பரசுராமன், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.எல்.சுந்தர், தி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஆர்.ராஜன், ஜி. ஏழுமலை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



ஆர்.கே. நகர் மேற்குப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர் தலைமையில் 10 ஆயிரம் பேருக்கு நிவாரண உதவிகளை அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர். மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நேதாஜி யு.கணேசன், இரா.லட்சுமணன், மாஸ் டி.வெங்கடேசன், எம்.லோகநாதன், எம்.கோவிந்தராஜ், திராவிட செல்வி, பி.சீனிவாசன், ஏ.டி.மணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேளச்சேரி பகுதி மக்களுக்கு

# 6-வது நாளாகத் தொடர்ந்து நிவாரண உதவிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

சென்னை, டிச.11-

மிக்ஜாம் புயல் காரணமாக, பாதிக்கப்பட்ட சென்னை வேளச்சேரி பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்.

மிக்ஜாம் புயல் காரணமாக, வரலாறு காணாத அளவில், தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தன. முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பாதிப்புக்குள்ளான வேளச்சேரி பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தொடர்ந்து 6வது நாளாக நேற்றும் (10.12.2023) வழங்கினார்.

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி வளாகத்தில் இருந்து லாரிகளில் நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்று, அப்பகுதி மாமன்ற உறுப்பினர்கள் மூலமாக, வேளச்சேரி பகுதியில் உள்ள திரௌபதி அம்மன் கோவில் தெரு, ஜெகநாதபுரம் தெரு, ஊரணியம்மன் கோவில் தெரு, தண்டபாணி தெரு, உத்தேரி கரை ராஜத்தெரு, நடராஜன் தெரு, கபாலி தெரு, நியூ காலனி, பரமேஸ்வரன் தெரு, கோகிலன் தெரு, டான்சி நகர், வி.ஜி.பி.நகர், அன்னை இந்திரா நகர், வீனஸ் காலனி, மகாலெட்சுமி தெரு, தந்தை பெரியார் நகர் (phase1&2), அன்பழகன் நகர், எம்.ஜி.ஆர். நகர் (கானகம்), கட்டபொம்மன் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, பரணி தெரு, சரஸ்வதி தெரு, யமுனா தெரு, பொன்னி தெரு, புத்தர் தெரு, ஸ்ரீனிவாச மின் ஹால் அருகில், கலைஞர் நகர் (178ஏ) ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அரிசி, கோதுமை, பிரட், பிஸ்கெட் மற்றும் போர்வை ஆகிய நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நெடுஞ்சாலைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன், சென்னை துணை மேயர் மகேஷ்குமார், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா. சந்திரசேகர், பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்களும், அலுவலர்களும் உடனிருந்தனர்.

